விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதியில்

வாக்கு எண்ணிக்கை மைய திமுக முகவர்கள் ஆலோசனை கூட்டம்

▶ அருப்புக்கோட்டையில் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கான முகவர்கள் நடத்தை விதிமுறைகள் குறித்த ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கலந்து கொண்டார். அடுத்தபடம்: சிவகாசியில் திமுக வாக்கு எண்ணிக்கை முகவர்கள் ஆலோசனை கூட்டம் மாநகரச் செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன், சிவகாசி ஒன்றிய செயலாளர் விவேகன்ராஜ் முன்னிலையில் நடைபெற்றது. கடைசிபடம்: ராஜபாளையத்தில் எம்எல்ஏ தங்கபாண்டியன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அருப்புக்கோட்டை, ஜூன் 2: விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதியில் வாக்கு எண்ணிக்கை மையத்திற்கான திமுக முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் கடந்த மாதம் 19ம் தேதி 39 நாடாளுமன்ற தொகுதி மற்றும் விளவங்கோடு சட்டமன்றத்துக்கான இடைத்தேர்தல் ஒரே கட்டமாக நடந்து முடிந்துள்ளது. நேற்று 7வது இறுதிக் கட்ட தேர்தல் நடந்து முடிந்தது. ஜூன் 4ம் தேதி காலை 7 மணிக்கு நாடு முழுவதும் வாக்கு எண்ணும் பணிகள் தொடங்க உள்ளது. முதலில் தபால் வாக்குகளை எண்ணும் பணியும் அதைத் தொடாந்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளும் எண்ணப்படவுள்ளன. இதற்கான பணியில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்நிலையில், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் வாக்கு எண்ணிக்கையின் போது தலைமை முகவர், முகவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆலோசனை நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் காணொளி காட்சி வழியாக ஒளிபரப்பப்பட்டது. சட்டத்துறை செயலர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோவன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ் இளங்கோவன் ஆகியோர் காணொளி காட்சிவாயிலாக பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார்.

▶ சென்னை அண்ணா அறிவாலயத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக பங்கேற்ற திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் நிர்வாகிகள்.

இதில் விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அருப்புக்கோட்டையில் நடைபெற்ற கூட்டத்தில் விருதுநகர் தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், அமைச்சருமான சாத்தூர் ராமச்சந்திரன் கலந்து கொண்டார். கூட்டத்தில் வாக்கு எண்ணிக்கையின் போது தலைமை முகவர் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ ஆகியோர் காணொலி காட்சி வாயிலாக ஆலோசனைகளை வழங்கினர்.

கூட்டத்தில் முன்னாள் எம்எல்ஏ விஜயகுமார், முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல்ஹமீது, முன்னாள் நகர் மன்ற தலைவர் சிவப்பிரகாசம், மாநில நெசவாளர் அணி செயலாளர் பழனிச்சாமி, நகர திமுக செயலாளர் ஏ.கே.மணி, ஒன்றிய செயலாளர்கள் பொன்ராஜ் பாலகணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாபுஜி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் அழகு ராமானுஜம், மற்றும் தலைமை முகவர்கள் வாக்கு எண்ணிக்கை முகவர்கள் கலந்து கொண்டனர்.

சிவகாசி

இதே போல் சிவகாசி சட்டமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கை முகவர்கள் ஆலோசனை கூட்டம் திருத்தங்கல் தனியார் திருமண மண்டபத்தில் சிவகாசி மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் தலைமையில் சிவகாசி யூனியன் துணைத் தலைவரும் தெற்கு ஒன்றிய கழக செயலாளருமான விவேகன்ராஜ் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநகர பகுதி கழகச்செயலாளர்கள் கவுன்சிலர் அ.செல்வம், காளிராஜன், கருணாநிதிபாண்டியன், மாரீஸ்வரன், திருத்தங்கல் முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் பொன்சக்திவேல், மாநகராட்சி மண்டலகுழு தலைவர் குருசாமி, மாநகராட்சி கவுன்சிலர் சேதுராமன், மாவட்ட பிரதிநிதி ராஜேஷ், மாநகர துணைச் செயலாளர் ரவிச்செல்வம் மற்றும் கட்சி நிர்வாகிகள் முகவர்கள் கலந்து கொண்டனர்.

ராஜபாளையம்

ராஜபாளையத்தில் திமுக வாக்கு எண்ணிக்கை மையத்திற்கான முகவர்களின் வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான ஆலோசனை கூட்டம் எம்எல்ஏ தங்கப்பாண்டியன் தலைமையில், தெற்கு நகர செயலாளர். பேங்க் ராமமூர்த்தி, வடக்கு நகர செயலாளர் மணிகண்டராஜா முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர் கனகராஜ், செட்டியார்பட்டி, சேத்தூர் பேரூர் கழக செயலாளர்கள் இளங்கோவன், சிங்கம்புலி அண்ணாவி மற்றும் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மேம்பாலம் அமைக்க கோரி தீர்மானம்

விருதுநகர், ஜூன் 2: விருதுநகர் அரசு ஊழியர் சங்ககட்டிடத்தில் நெடுஞ்சாலை பராமரிப்பு ஊழியர்கள் சங்க மாவட்ட பேரவை தலைவர் முத்துக்குமார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் 2022 முதல் நிறுத்தப்பட்ட டிஏ, சரண்டர்களை மீண்டும் வழங்க வேண்டும். சாலைப்பணியாளர்களுக்கு 10 சத ஆபத்து காலபடி வழங்க வேண்டும். சாலைப்பணியாளர்கள் பணி நீக்க காலமான 41 மாதத்தை ஓய்வுக்கு பின் ஓய்வூதிய பலன்களுக்கு பணிகொடைக்குபொருந்தக் கூடிய வகையில் அரசாணை வெளியிட வேண்டும். அரசு ஊழியர்களுக்கு சிகிச்சைக்கு முன்பணம் கோரும் திட்டத்தை கைவிட்டு கட்டணமில்லா சிகிச்சையை முறைப்படுத்த வேண்டும்.

கலெக்டர் அலுவலகம் எதிரில் விபத்தை தடுக்கும் வகையில் மேம்பாலம் அமைக்க வேண்டுமென்பது உள்ளிட்ட கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

டூவீலரில் இருந்து விழுந்தவர் பலி

தொண்டி, ஜூன் 2: தொண்டி அருகேயுள்ள எஸ்பி.பட்டினம் அம்பேத்கர் நகரை சேர்ந்தவர் முனியசாமி (47). இவர் நேற்று முன்தினம் அப்பகுதியில் டூவீலரில் செல்லும் போது நிலை தடுமாறி கீழே விழுந்துள்ளார். இதில் படுகாயமடைந்த அவரை மீட்டு ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி முனியசாமி நேற்று இறந்தார். இதுகுறித்து எஸ்பி.பட்டினம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

வேன் மோதி ஓட்டல் உரிமையாளர் பலி

திருப்புத்தூர், ஜூன் 2: திருப்புத்தூர் அருகே சேவினிப்பட்டியை சேர்ந்தவர் ஆண்டியப்பன் (52). இவர் கீழச்சிவல்பட்டி தேசிய நெடுஞ்சாலை பகுதியில் ஓட்டல் வைத்து நடத்தி வந்தார். இந்நிலையில் நேற்று மதியம் ஓட்டலில் சமைப்பதற்காக கீழச்சிவல்பட்டிக்கு சென்று விறகு வாங்கி கண்டு டூவீலரில் வந்துள்ளார். ஓட்டல் அருகேவந்தவுடன் சாலையில் திரும்பும் போது பின்னே வந்த வேன் இவரது டூவீலர் மீது மோதியது. இதில் படுகாயமடைந்த ஆண்டியப்பன் சம்பவ இடத்திலே உயிரிழந்தார். தகவலறிந்து வந்த கீழச்சிவல்பட்டி போலீசார் அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருப்புத்தூர் ஜிஹெச்சிற்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுகுறித்து எஸ்ஐ ராஜ்குமார் வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகிறார்.

வத்திராயிருப்பு ஊராட்சி பகுதிகளில்

பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை கலெக்டர் ஆய்வு

▶ வத்திராயிருப்பு அருகே ராமசந்திராபுரம் ஊராட்சியில் கலைஞர் நூற்றாண்டு விழா பெருமளவு மரக்கன்றுகள் நடப்படும் திட்டத்தின் கீழ் ரூ.4 லட்சம் மதிப்பில் 800 மரக்கன்றுகள் நடப்பட்டு வருவதை கலெக்டர் ஜெயசீலன் ஆய்வு செய்தார்.

வத்திராயிருப்பு, ஜூன் 2: விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து கலெக்டர் ஜெயசீலன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்படி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம் களத்தூர் கிராமத்தில் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ், தலா ரூ.2.78 இலட்சம் மதிப்பில் 64 வீடுகள் கட்டப்பட்டு வருவதையும், மூவரைவென்றான் ஊராட்சியில் அயோத்திதாஸ் பண்டிதர் திட்டத்தின் கீழ் ரூ.25 இலட்சம் மதிப்பில் சமூதாயக்கூடம் கட்டப்பட்டு வருவதையும், துலுக்கப்பட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.7.20 இலட்சம் மதிப்பில் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டு வருவதையும், முத்துக்குமாரபுரம் கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.8.80 இலட்சம் மதிப்பில் கதிர் அடிக்கும் களம் அமைக்கப்பட்டு வருவதையும்,

ராமசந்திராபுரம் ஊராட்சியில் கலைஞர் நூற்றாண்டு விழா பெருமளவு மரக்கன்றுகள் நடப்படும் திட்டத்தின் கீழ் ரூ.4 இலட்சம்; மதிப்பில் 800 மரக்கன்றுகள் நடப்பட்டு வருவதையும், 15-வது மானிய நிதி குழு திட்டத்தின் கீழ், ரூ.3.46 இலட்சம் போர்வெல் மற்றும் பைப்லையன் அமைக்கப்பட்டு வருவதையும், வலையபட்டி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.30.10 இலட்சம் மதிப்பில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டடம் கட்டப்பட்டு வருவதையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு பணிகளின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.

மேலும் நடைபெற்று வரும் பணிகளை விரைவாகவும், தரமானதாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு அறிவுத்தினார். இந்த ஆய்வின் போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில்

ரூ.65 ஆயிரம் பறிமுதல் 2 பேருக்கு சிறை

ஸ்ரீவில்லிபுத்தூர், ஜூன் 2: விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலர் பகுதி அலுவலகத்தில் கடந்த 10.7.2013ல் விருதுநகர் லஞ்ச ஒழிப்பு போலீசார் திடீர் சோதனை நடத்தினர். அப்போது அலுவலகத்தில் இருந்த தனியார் டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் கனகராஜ் மற்றும் ராமராஜ், வீரக்குமார் ஆகியோரிடமிருந்து கணக்கில் வராத ரூ.65 ஆயிரத்து 230 பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இதுதொடர்பான வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கிய நீதிபதி பிரீத்தா, 'தனியார் டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் கனகராஜ் மற்றும் ராமராஜ் ஆகியோருக்கு தலா 3 ஆண்டு கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

கால்வாயில் விழுந்த காளை மீட்பு

தேவகோட்டை, ஜூன் 2: தேவகோட்டை பஸ் நிலையம் முன்பாக கழிவு நீர் கால்வாய் உள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் அந்த கால்வாய்க்குள் காளை மாடு ஒன்று விழுந்தது. தகவலறிந்து வந்த தேவகோட்டை தீயணைப்பு வீரர்கள் கால்வாய்க்குள் இறங்கி காளையை பத்திரமாக மீட்டு மேலே கொண்டு வந்தனர். மயக்க நிலையில் இருந்த காளை சிறிதுநேரம் கழித்து சென்றது.

ICICI Home Finance

கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஐசிஐசிஐ எச்டிஎப்சி டவர், அந்தேரி–குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை–400059, இந்தியா
கிளை அலுவலகம்: 2வது தளம், எண்: 38/1, ஸ்ரீ லட்சுமி நிவாஸ், கிருஷ்ணா ராவ் டேங்க் தெரு, மதுரை, தமிழ்நாடு–625001

[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	K. செல்வம் (கடன்தாரர்) ரேணுகா R (உபகடன்தாரர்) K விசாலாட்சி (உபகடன்தாரர்) கடன் கணக்கு எண். LHMDU00001274341 & LHMDU00001274342	T.S.No.341 மற்றும் மனை எண்.7,8,9&10 ஆகியவை ஒருங்கிணைக்கப்பட்டு பிரிக்கப்பட்டதில் மனை எண்.15, காரைக்குடி பதிவு மாவட்டம், காரைக்குடி இணை–1 சார்பதிவு மாவட்டத்தில், காரைக்குடி முனிசிபல் டவுன், சர்வே பிளாக் எண்.1, சர்வே வார்டு எண்.4, காரைக்குடி தாலுகா, சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள சொத்து.	Rs. 1,04,09, 442/- மே 16, 2024	Rs. 1,37,06, 775/- Rs. 13,70, 680/-	ஜூலை 01, 2024 11:00 AM 03:00 PM	ஜூலை 10, 2024 02:00 PM 03:00 PM
2.	M கூடலிங்கம் (கடன்தாரர்) M லதா (உபகடன்தாரர்) கடன் கணக்கு எண். LHMDU00001453409 & LHMDU00001453410	சிவகாசி கிராமம், சர்வே எண்.125B2, புதிய T.S.No.21/8,(பழைய T.S.No.21), வார்டு எண்.A, பிளாக் எண்.3, சிவகாசி டவுன், சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டம், கட்டிடம் கட்டப்பட்டுள்ள மனை எண்.20, புதிய கதவு எண்.322, பழைய கதவு எண்.39/6A, சேர்மன் ஏ ஆர் அருணாச்சலம் சாலை, சிவகாசி முனிசிபாலிட்டி எல்லைக்குள் அமைந்த சொத்து.	Rs. 22,24,035/- மே 16, 2024	Rs. 65,95, 470/- Rs. 6,59,550/-	ஜூலை 01, 2024 11:00 AM 03:00 PM	ஜூலை 10, 2024 02:00 PM 03:00 PM

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை **குளோப் டெக்** இணையதளத்தில் (URL இணைப்பு– https://BestAuctionDeal.com) நடத்தப்படும். அடமானதாரர்களுக்கு அறிவிப்பின் மூலம் **ஜூலை 09, 2024 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2வது தளம், எண்: 38/1, ஸ்ரீ லட்சுமி நிவாஸ், கிருஷ்ணா ராவ் டேங்க் தெரு, மதுரை, தமிழ்நாடு–625001** இடத்தில் **ஜூலை 09, 2024 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் E காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) தங்கள் ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்க ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்டப் பிரதியை **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட், 2வது தளம், எண்: 38/1, ஸ்ரீ லட்சுமி நிவாஸ், கிருஷ்ணா ராவ் டேங்க் தெரு, மதுரை, தமிழ்நாடு–625001** என்ற இடத்தில் **ஜூலை 09, 2024 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **சிவகங்கை, விருதுநகரில்** மாற்றத்தக்க வகையில் "ICICI Home Finance Company Ltd– Auction" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்து அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300** இல் அல்லது எங்கள் **விற்பனை & சந்தைப்படுத்தும் கூட்டுதாரர் நெக்ஸென் சொலூசன்ஸ் பிரைவேட் லிமிடெட்** உடன் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டுக் காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமைக் கொண்டுள்ளார். விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள்: ஜூன் 02, 2024
இடம்: சிவகங்கை, விருதுநகர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777 9.30 AM - 6.00 PM